***கல்வித் தொடர்***

*கட்டுக்கதைகள் எதிர் உண்மைகள் (1)*

கோவிட்-19 தொற்றுக்கள் அதிகரித்து வருவதால், புதிதாக கிடைக்கக்கூடிய தடுப்பூசி விநியோகம் தொடர்பான கேள்விகளும் அதிகரித்து வருகின்றன.

CASSA எனப்படும் தென்னாசியர்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களின் முகவர் சபையின் Covid-19 தடுப்பூசி தொடர்பான கல்வித் தொடர் அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வதந்தி 1:** தடுப்பூசி போடுவதால் எனக்கு கோவிட்-19 வந்துவிடும்

உண்மை - கோவிட்-19 தடுப்பூசிகள் தொற்று நோயை ஏற்படுத்துவதில்லை. அவை உயிருள்ள வைரஸ்களைக் கொண்டிருக்கவில்லை என்பதால், அவற்றினால் தொற்று நோய் ஏற்படுவதற்கான அபாயம் இல்லை. இருப்பினும், காய்ச்சல், தசைவலி அல்லது சோர்வு போன்ற வடிவங்களில் சில பக்க விளைவுகள் ஏற்படலாம், ஆனால் இந்த பக்க விளைவுகள் எந்தவொரு தடுப்பூசியினாலும் ஏற்படக்கூடியதே.

**வதந்தி 2:** கோவிட்-19 தடுப்பூசியில் ஒரு கண்காணிப்பு சாதனம் உள்ளது.

உண்மை - தடுப்பூசிகளில் கண்காணிப்பு சாதனங்கள், உலோகத் துண்டுகள் அல்லது மைக்ரோசிப்கள் எதுவும் இல்லை.

**வதந்தி 3** : தடுப்பூசிகளைப் பெற்றபின் முகக்கவசங்களை அணிய வேண்டியதில்லை அல்லது சமூக இடைவெளி பேண வேண்டியதில்லை.

உண்மை - தடுப்பூசி பெற்றபின் கூட முக கவசங்கள் அணியவேண்டும் மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். அனைவருக்கும் உடனடியாக தடுப்பூசி போடப்படாது மற்றும் பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் வரை வைரஸ் பரவுவதற்கு இன்னும் சாத்தியமுள்ளது. எனவே, சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் மற்றும் தவறாமல் கைகளை அடிக்கடி கழுவுதல் அல்லது சனிட்டிஸிர் மூலம் சுத்தப்படுத்துதல் போன்ற நெறிமுறைகளை கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம் ஆகும்.

**வதந்தி 4:** நான் தடுப்பூசியைப் பெற்றவுடன். கோவிட்-19க்கு நேர்மறையாக சோதிக்கப்படுவேன்.

உண்மை - கோவிட்-19 தடுப்பூசி உடலுக்குள் உயிருள்ள வைரஸை கொண்டு செல்வதில்லை. கோவிட்-19 வைரஸை கண்டறியப் பயன்படுத்தப்படும் சோதனைகள், கோவிட்-19 வைரஸ் உள்ளதை சோதிப்பதால் சோதனை முடிவுகள் நேர்மறையாக இருக்காது. சோதனை முடிவு நேர்மறையானதாக இருந்தால், அதற்கு காரணம் அந்த நபர் தடுப்பூசியைப் பெறுவதற்கு முன்பு வைரஸால் பாதிக்கப்பட்டு அவரது நோயெதிர்ப்பு அமைப்புக்கு அவர்களின் உடலை முழுமையாகப் பாதுகாக்க நேரம் இல்லாதிருந்ததாகும்.

கோவிட்-19 தடுப்பூசி பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா?

இது தொடர்பாக அறிந்து கொள்ள **CASSA** வின் Covid-19 தடுப்பூசி தொடர்பான கல்வித் தொடரில் apnahealth.org என்ற இணையதள முகவரியை பார்வையிடவும்.

வழங்கப்பட்ட தகவல்கள் ஒன்டாரியோ பொது சுகாதார பிரிவின் தகவல்கள் அடிப்படையில் பெறப்பட்டவை.